RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-76 | 22 மார்ச் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## சமூக விரோத செயல்களுக்கு முற்றுப்புள்ளி மத்திய அரசுக்கு ஓபிஎஸ் கோரிக்கை

சென்னை, மார்ச்.22

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முதல்வரின் கட்டுப்பாட்டில் இல்லை. நாள்தோறும் பல கொலைகள் நடப்பதை பார்க்கும்போது வன்முறையாளர்களின் புகலிடமாக தமிழகம் மாறி இருப்பதைக் காட்டுகிறது. இந்த நிலைமை நீடித்தால் வன்முறையில் முதன்மை மாநிலம் என்ற அவப்பெயரை



தமிழகத்துக்கு திமுக அரசு தேடித் தரும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

தமிழகத்தை அமளிக்காடாக மாற்றியிருக்கும் திமுக அரசின் செயல்பாடுகள் கண்டனத்துக் குரியவை. தமிழகத்தையும், தமிழக மக்களையும் வன் முறையிலிருந்து காப்பாற்றவும், தமிழ்நாட்டில் கொடிகட்டிப் பறக்கும் சமூக விரோதச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குற்ற செயல்களை தடுக்க தவறும் போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை: டிஜிபி எச்சரிக்கை

சென்னை, மார்ச்.22

குற்றச் செயல்களை தடுக்க தவறும் போலீஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என டிஜிபி சங்கர் ஜிவால் எச்சரித்துள்ளார். திருநெல்வேலியில், ஓய்வுபெற்ற போலீஸ் எஸ்ஐ ஜாகீர் உசேன் 2 தினங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டார்.

இதேபோல் சேலத்தைச் சேர்ந்த பிரபல ரவுடி ஜான், ஈரோட்டில் காரில் சென்றபோது கொலை செய்யப்பட்டார். இச்சம்பவங்கள் தமிழகம்



முழுவதும் அதிர்வலை களை ஏற்படுத்தியது.

இக்கொலைகளுக்கு எதிர்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்ததோடு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுவிட்டதாக குற்றம்சாட்டினர்.

இதுஒருபுறம் இருக்க, ரவுடிகள், தலைமறைவு குற்றவாளிகள், குற்றப்பின்னணி கொண்டவர்கள் என பொது மக்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் மீது பாரபட்சம் இன்றி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து மாவட்ட போலீஸாருக்கும் டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், குற்றச் செயல்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுக்க வேண்டும். தடுக்க தவறும் போலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை பாயும் எனவும் டிஜிபி எச்சரித்துள்ளார்.

## தொகுதி மறுவரையறை விவகாரம் ‘தற்போதுள்ள விகிதாச்சாரத்தை மாற்றக் கூடாது’ பிருந்தா காரத்



சென்னை, மார்ச்.22

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் நாடாளு மன்றத்தில் மாநிலங்களுக்கு தற்போதுள்ள விகிதாச்சாரத்தை மாற்றக் கூடாது என்று சிபிஎம் மூத்த தலைவர் பிருந்தா காரத் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர் களிடம் பேசிய அவர், “தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் எடுத்த முயற்சியை நாங்கள் ஆதரிக்கிறோம். இது ஒரு முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க நடவடிக்கை. சிபிஎம்ன் கேரள முதல்வர் இந்த கூட்டத்தில் பங்கேற்பார்.

இது இடங்கள் மற்றும் எண்ணிக்கையைப் பற்றியது மட்டுமல்ல, ஜனநாயகத்தின் அம்சத்துடனும் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புகிறோம். தொகுதி மறுவரையறை என்பது மக்கள் தொகை அடிப்படையில் ஏற்படுத்தப்படுமானால், அது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய குறிப்பாக, மக்கள் தாங்களாக முன்வந்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு அது தண்டனையாக அமையும்.

மாநிலத்தின் வளர்ச்சி காரணமாகவே, மக்கள் தொகை குறைப்பு சாத்தியமாகி உள்ளது. மாற்றுக் கொள்கைகளின் காரணமாக விரைவான வளர்ச்சிக்கு வழிவகுத்த மாநிலங்களையும் மாநில மக்களின் குரலையும் நீங்கள் தண்டிக்கப் போகிறீர்கள் என்றால், அது நியாயமற்றது. நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு மாநிலத்துக்குமான பிரதிநிதித்துவத்துக்கும் ஒரு விகிதாச் சாரம் இருக்கிறது. அது தொடர வேண்டும். அந்த விகிதாச்சாரத்தை நீங்கள் மாற்ற முடியாது என்று நாங்கள் நம்புகிறோம்“ என தெரிவித்துள்ளார். இதனிடையே, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நாளை நடைபெற உள்ள தொகுதி மறுவரையறை கூட்டத்தில் பங்கேற்க கேரள முதல்வர் பினராயி விஜயன் சென்னை வந்துள்ளார். அவரை, திமுக எம்பிக்கள் கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் வரவேற்றனர்.

## இருவழிச்சாலை தரம் குறித்து கண்காணிப்பு பொறியாளர் ஆய்வு



சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் நயினார்கோவில் அண்டக்குடி இளையான்குடி சிவகங்கை மேலூர் சாலையில் சக்கந்தி முதல் மலம்பட்டி வரை 12கி.மீ நீளமுள்ள இருவழிச்சாலையானது நான்குவழிச்சாலையாக விரிவாக்கம் செய்யும் பணிகள் முதலமைச்சர் சாலை விரிவாக்கத் திட்டத்திக் கீழ் நடைபெற்றது. தற்பொழுது சாலைப்பணியானது முற்றிலுமாக முடிவுற்ற நிலையில் அப்பணியின் தரம் குறித்து கண்காணிப்பு பொறியாளர் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உடன் கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப, சிவகங்கை மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) தரக்கட்டுபாடு சிவகங்கை, உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ)க(ம)ப, மற்றும் களப்பணியாளர்கள் உடனிருந்தனர்.

## டெல்லி ஐகோர்ட் நீதிபதி வீட்டில் கட்டுக்கட்டாக பணம் அம்பலப்படுத்திய தீ விபத்து; கொலீஜியம் அதிரடி

புதுடெல்லி, மார்ச்.22

டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா உச்சநீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரையின் பெயரில் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். நீதிபதியின் பங்களாவில் ஏற்பட்ட தீ விபத்தின் போது அங்கு அதிக அளவில் பணம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீதிபதி வர்மா அவர் முன்பு பணிபுரிந்த அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கே மாற்றப்படுகிறார்.

இதுகுறித்து தகவல் அறிந்தவர்களின் கூற்றுப்படி, நீதிபதி வர்மா டெல்லியில் இல்லாத போது அவரின் வீட்டில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்புத்துறையினர் அங்கு விரைந்து சென்று தீயைக் கட்டுப்படுத்தி அணைத்தனர். ஆனால் எதிர்பாராத விதமாக




பல அறைகளில் அதிக அளவில் பணம் இருப்பதை தீயணைப்புத் துறையினர் கண்டுபிடித்தனர். தொடர்ந்து அந்தப் பணத்தை அவர்கள் மீட்டனர்.

நீதிபதியின் வீட்டில் இருந்து கணக்கில் வராத பணம் கண்டுபிடிக்கப்பட்டது குறித்த அறிக்கை கிடைத்ததைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தின் கொலீஜியம் நீதிபதி யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு மாற்ற முடிவு செய்தது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான கொலிஜீயம், நீதிபதி வர்மாவை இடமாற்றம் செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. யஷ்வந்த் வர்மா, கடந்த 2021, அக்டோபரில் டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

இருந்த போதிலும் நீதிபதியை இடமாற்றம் செய்வது மட்டும் போதாது, அவரை ராஜினாமா செய்ய வலியுறுத்த வேண்டும் என்று கொலிஜீயம் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்ததாக கூறப்படுகிறது. அவர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்தால், ஒரு உள்விசாரணை குழுவினை அமைக்கவேண்டும் என்று தெரிவித்தனர்.

நீதிபதிகள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை கையாள்வதற்கான நடைமுறைகளின் படி, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, புகார் பெறப்பட்ட நீதிபதியிடமிருந்து விளக்கம் கேட்பார். அவரால் அளிக்கப்பட்ட விளக்கத்தில் தலைமை நீதிபதிக்கு உடன்பாடு இல்லாத போது, ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய உள்விசாரணைக் குழுவினை அமைக்கலாம். விசாரணைக் குழு என்பது நீதிபதி ஒருவர் நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கான முதல் படியாகும்.

## உச்ச நீதிமன்ற ஆணைப்படி தமிழக சதுப்பு நிலங்களை அறிவிக்கை செய்ய வேண்டும்: ராமதாஸ்

சென்னை, மார்ச்.22

உலகத் தண்ணீர் நாள் மார்ச் 22 ஆம் நாளான நாளை கடைபிடிக்கப்படவுள்ள நிலையில், உச்சநீதிமன்ற ஆணைப்படி தமிழக சதுப்பு நிலங்களை அறிவிக்கை செய்ய வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “உலகத் தண்ணீர் நாள் மார்ச் 22 ஆம் நாளான நாளை கடைபிடிக்கப்படவுள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள நீர் ஆதாரங்களான சதுப்பு நிலங்களை அறிவிக்கை செய்து பாதுகாக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நீர்வளங்களைக் காப்பதில் தமிழக அரசு காட்டும் அலட்சியம் கண்டிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை 2025 ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் நாள் கருப்பொருளாக ‘பனிப்பாறை பாதுகாப்பு’ என்பதை அறிவித்துள்ளது. பூவுலகின் நீர் சுழற்சியில் பனிக்



கட்டியாக உறைந்திருக்கும் நீரின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலகின் ஒட்டுமொத்த நீர்வளத்தில் 97.5% கடலில் உப்பு நீராக உள்ளது. மீதமுள்ள 2.5% மட்டுமே நன்னீர் வளமாகும். இந்த நன்னீர் வளத்திலும் 70% துருவங்கள் மற்றும் மலைகளில் பனிப்பறைகளாக உள்ளன. புவியின் நிலப்பரப்பில் 10% பனிப்பாறைகளாக உள்ளன.

பனிப்பாறைகள் மிக முதன்மையான ஒரு நீர் வள ஆதாரமாக உள்ளன. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பனிப்பாறைகள் காலநிலை மாற்றத்தின் காரணமாக வேகமாக உருகிவருகின்றன. 1900 ஆண்டுக்கு பின்னர் கடல் மட்டம் 22 செ.மீ உயர்ந்துள்ளது. இதற்கு பனிப்பாறைகள் உருகுவதே காரணமாகும். 1900, 1990 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் உருகிய அளவைவிட 2006 2015 ஆம் ஆண்டுகளுக்கு இடையே 2.5 மடங்கு அதிகமாக பனிப்பாறைகள் உருகியதாக ஐபிசிசி அமைப்பு கணித்துள்ளது. எனவே, பனிப்பாறைகளை பாதுகாப்பது ஒரு போர்க்கால அடிப்படையிலான தேவை என ஐநா அவை தெரிவிக்கிறது.

காலநிலை மாற்றத்தின் காரணமாக மழைப்பொழிவில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஒருபுறம் வறட்சி அதிகமாகிறது. மறுபுறம் மிகக் குறுகிய காலத்தில் மிக அதிக அளவு மழைப் பொழிவு ஏற்பட்டு வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இவற்றால் தண்ணீர் தட்டுப்பாடு மென்மேலும் மோசமடையக்கூடும். எனவே, தமிழ்நாட்டின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் காப்பாற்ற போர்க்கால வேகத்தில் நீர்வள ஆதாரங்களை காப்பாற்றவும் மேம்படுத்தவும் வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள 34 ஆறுகளையும் மேம்படுத்த வேண்டும். தமிழ்நாட்டின் சுமார் 41,000 ஏரிகளை மீட்டு, அவற்றின் முழு கொள்ளவை உறுதி செய்ய வேண்டும்.

இந்நிலையில், மார்ச் 22, உலக தண்ணீர் நாளை முன்னிட்டு 29.03.2025 அன்று கிராமசபை கூட்டம் நடத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இக்கூட்டதின் கருப்பொருளாக ‘உலக தண்ணீர் தினத்தின் கருப்பொருளினைப் பற்றி விவாதித்தல்’ என்பது அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி, அந்தந்த ஊராட்சிகளின் நீர்நிலைகளை 2017 சதுப்புநில விதிகளின் கீழ் அறிவிக்கை செய்யக் கோரும் தீர்மானத்தினை அனைத்து கிராமசபையில் நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## பற்றி எரியும் அவுரங்கசீப் கல்லறை சர்ச்சை: மகாராஷ்டிரா கோயில்களில் பக்தர்கள் வருகை குறைவு - நீடிக்கும் பதற்றம்

புதுடெல்லி, மே.22

மகாராஷ்டிராவில் தொடரும் அவுரங்கசீப் சர்ச்சையால் மாநிலத்தின் முக்கியக் கோயில்களில் பக்தர்கள் வருகை குறைந்துள்ளது. சுற்றுலா துறையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மகாராஷ்டிராவின் அவுரங்கசீப் பெயரில் அழைக்கப்பட்ட மாவட்டம், அவுரங்காபாத். இது, அவுரங்கசீப் பெயரை அகற்றவேண்டி, சம்பாஜி நகர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. சம்பாஜி நகரின் குலாலாபாத்தில்தான் அவுரங்கசீப்பின் கல்லறை அமைந்துள்ளது. இது, மத்திய அரசின் இந்திய தொல்லியல் ஆய்வகத்தால் பாதுகாக்கப்பட்ட வரலாற்று சின்னமாக உள்ளது.

மகராஷ்ராவின் இந்த சம்பாஜிநகருக்கு வரும் சுற்றுலா வாசிகளில் பெரும்பாலோனோர் அவுரங்கசீப் கல்லறைக்கும் வருவது உண்டு. இவர்களில் முஸ்லிம்கள், ஔவுரங்கசீப்பின் கல்லறைக்கு பூக்களிட்டு மரியாதை செய்கின்றனர்.

இந்த சம்பாஜி நகரின் குலாலாபாத் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் முக்கியக் கோயில்கள் பல உள்ளன. இதில், கிரிஷ்ணேஷ்வர் ஜோதிர்லிங்கம், பத்ர மாருதி, கிரிஜா தேவி மற்றும் சுலிபஞ்சன் தத் உள்ளிட்ட கோயில் உள்ளன.




அவுரங்கசீப்பின் கல்லறை தொடர்பாக கடந்த சில நாட்களாக மகாராஷ்டிரா அரசியல் சூழல் சூடுபிடித்துள்ளது. இதன் மீது விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங்தளத்தினர் மார்ச் 17ல் நடத்திய போராட்டத்தில் நாக்பூரில் வன்முறை மோதல்கள் நடந்தன. இதுபோன்ற காரணங்களால், அவுரங்கசீப் கல்லறைக்கு அருகிலும், அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள கோயில்களில் பக்தர்களின் எண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.

மாநிலத்தில் நிலவும் பதற்றத்தின் விளைவு கோயில்களில் காணப்படுகிறது. இதனால், மகராஷ்டிராவின் இந்து மத வழிபாட்டுத் தலங்கள் பொருளாதார நெருக்கடியை சந்திக்கத் துவங்கி உள்ளன.

சம்பாஜிநகரில் அமைந்துள்ள கிரிஷ்ணேஷ்வர் ஜோதிர்லிங்கம், பத்ர மாருதி, கிரிஜா தேவி கோயில் மற்றும் சுலிபஞ்சன் தத் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் பக்தர்களின் எண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் மீது மகராஷ்டிராவிலிருந்து வெளியாகும் தகவல்கள், அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளன. இதன்படி, வழக்கமாக கூட்டம் அதிகமாக இருக்கும் தேவகிரிகோட்டையிலும் மக்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கிரிஷ்ணேஷ்வர் கோயில் 12 ஜோதிர்லிங்கங்களில் ஒன்றாகும். இக்கோயிலுக்கு சாதாரண நாட்களில், தினமும் 20,000 பக்தர்கள் வழிபாடுகளுக்கு வருகிறார்கள். கிர்ஷ்ணேஷ்வர் கோயிலுக்கு வார இறுதி நாட்களிலும், திங்கட்கிழமைகளிலும், பக்தர்கள் எண்ணிக்கை நாற்பதாயிரத்தை தாண்டி விடுகிறது.

இந்த பிரச்சனையில் கோயில் அறங்காவலர் யோகேஷ் டோபரே கூறியதாவது: இங்கு அமைதியின்மை காரணமாக பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. கடந்த மூன்று நாட்களில் 18,000 முதல் 20,000 பக்தர்கள் மட்டுமே கோயிலுக்கு வருகை தந்தனர், மேலும் நாக்பூர் கலவரத்துக்குப் பிறகு, எண்ணிக்கை வெறும் 5,000 ஆகக் குறைந்துள்ளது. எனத் தெரிவித்தார். மகராஷ்டிராவில் தனித்துவமாக இருப்பது, சாய்ந்த அனுமன் சிலை கொண்ட பத்ர மாருதி கோயில். மிகவும் பிரபலமான பழங்கால பத்ர மாருதி கோயிலும் தினமும் சுமார் 15,000 பக்தர்கள் அன்றாடம் வருவது உண்டு.

ஆனால் சர்ச்சை காரணமாக பக்தர்களின் எண்ணிக்கை 40 சதவிகிதம் குறைந்துள்ளது. இதன் காரணமாக, அக்கோயில்களைச் சுற்றியுள்ள உள்ளூர் வணிகங்களும் பெரும் இழப்பை சந்தித்துள்ளன.

பூஜை பொருட்கள், பூக்கள், பிரசாதம் மற்றும் மத நினைவுப் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் 70 சதவிகிதம் வரை விற்பனையில் சரிவை சந்தித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். அவுரங்கசீப் கல்லறை சர்ச்சை, இப்பகுதியில் சுற்றுலாவையும் பாதித்துள்ளது. எல்லோரா குகைகள், தவுலதாபாத் கோட்டைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக பல பக்தர்களும் சுற்றுலாப் பயணிகளும் சற்று விலகி இருப்பதாகக் கருதப்படுகிறது.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி மேற்பார்வையில் மற்றும் மாநகர நல அலுவலர் முருகானந் முன்னிலையில் மண்டலம்2 க்கு உட்பட்ட பகுதிகளில் நான்கு மண்டல சுகாதார குழுவினர் வணிக நிறுவனங்களில் தமிழக அரசு தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ள விற்பனை செய்யப்படுகிறது என பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் ஒன்பது வணிக நிறுவனங்களில் ஆய்வு செய்ததில் 50 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.




திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி முன்னிலையில் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் அம்ரூத் நான்காவது குடிநீர் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவிட்டார்.உடன் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன் தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம் மாநகராட்சிக்கு அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

## யோகாவில் வில்லாசனம் செய்து உலக சாதனை! அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பாராட்டு



திருவள்ளுவர், மார்ச்.22

திருவள்ளுவர் மாவட்டம், பட்டாபிராம், டாக்டர். சி. அருண் உலக சாதனையாளர் ஒரு கண்ணாடி ப குடவையில் அவரது உடலை பாம்பு போல் சுருட்டிய நிலையில் சுமார் 47 நிமிடங்கள் அசிஸ்ட் உலக சாதனையில் பதிவு பெற்று உள்ளார் அவரைப் போலவே தன் பிள்ளைகளையும் உலக சாதனை முயற்சித்து அதில் வெற்றி பெறவும் செய்துள்ளார். இதனைப் பாராட்டி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் பசுமைவழி சாலையில் உள்ள அவரது இல்லத்தில் டாக்டர். சி. அருண் அவர்களின் மனைவி, வழக்கறிஞர். அ.வெண்விழி, மகன் லெனின் வயது 8 யோகாவில் வில்லாசனம் மூன்று நிமிடம் இரண்டு நொடிகள் மற்றும் மகள் லைரா வயது நாலரை யோகாவில் சமகோண ஆசனா தொடர்ந்து 19 நிமிடங்களில் தன் உலக சாதனை செய்து அசிஸ்ட் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தவர்களை பாராட்டி அமைச்சர் தன் வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து பட்டாபிராம், தங்கமணி மெட்ரிகுலேஷன் பள்ளி மூத்த தலைமை ஆசிரியர், ஜெயபிரகாஷ், தலைமை ஆசிரியர், ஜெபா ஜெயபிரகாஷ், ஆசிரியர்கள் தமது பள்ளியில் படித்த மாணவர்கள் உலக சாதனை படைத்ததை வெகுவாக பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குன்னூர் அருகே இரவில் குடியிருப்பு பகுதியில் நடமாடும் ஒற்றை யானை பொதுமக்கள் அச்சம்

குன்னூர், மார்ச்.22

நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் சமீப காலமாக வனவிலங்குகளின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.இதனால் நகர மற்றும் கிராமப்புற பகுதியை சேர்ந்த மக்களும் அச்சத்தில் உள்ளனர்.இதில் கடந்த சில மாதங்களாக ஒற்றை யானை குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் நடமாடி வருகிறது. இந்த ஒற்றை யானை நேற்று இரவு காட்டேரி பகுதியில் உள்ள குடியிருப்புகளில் நடமாடி வருகிறது.



இதனால் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொது மக்களும் தூக்கமின்றிகாட்டு யானையை விரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வனத்துறையினரும் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு அதனை விரட்ட முயற்சி எடுத்தாலும்,மீண்டும் குடியிருப்பு பகுதிகளுக்கு இந்த ஒற்றை நடமாடி வருவதால் மக்கள் செய்து தெரியாமல் திகைத்து போய் உள்ளனர்.

இப்பகுதி மக்களை தூக்கமில்லாமல் மிரட்டி வரும் ஒற்றைக் காட்டு யானையை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டியடிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பண்பொழி திருமலை கோவிலுக்கு கிரிவலப் பாதை அமைக்க கோரிக்கை

தென்காசி மார்ச் 22.

தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள மலைக் கோவில்களில் பிரசித்தி பெற்ற கோவில்களில் பண்பொழியில் அமைந்துள்ள திருமலை குமாரசுவாமி கோவில் ஒன்றாகும் இக்கோவிலுக்கு 650 படிக்கட்டுகளை கடந்து சென்று மலை மீது அமைந்துள்ள முருகனை தரிசிக்க வேண்டும் கடந்த சில வருடங்களுக்கு முன்பு கடையநல்லூரை சார்ந்த கொடை வள்ளலும் அரசு ஒப்பந்ததாரரான அருணாச்சலம் செட்டியார் அவர்கள் கோவிலுக்கு மலைப்பாதையை இந்து சமய அறநிலைத்துறையோடு இணைந்து அமைத்து தந்தார் மலைப்பாதையில் பயணிகள் சொந்த வாகனங்கள் சென்று



வர அடிவாரத்தில் சோதனை சாவடி கடந்து செல்ல வேண்டும் மலைப்பாதை மூன்று சக்கர வாகனம் ஏறுவதற்கு அனுமதி இல்லை அதில் வரும் பயணிகளுக்கு பயணத்திற்காக இரண்டு மினி பேருந்துகளை வாங்கி கோவிலுக்கு அன்பளிப்பாக கொடுத்துள்ளார். மேலும் இக்கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா கார்த்திகை நட்சத்திரம், மாத பிறப்பு , தைப்பூசம் திருவிழா உள்ளிட்ட நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றது.

இக்கோவில் மலை மீது அமர்ந்துள்ளதால் பருவ காலங்களில் ஊட்டி கொடைக்கானல் போன்று காட்சி தருகிறது அதனால் இக்கோவிலுக்கு சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையும் அதிக அளவில் வரத் தொடங்கியுள்ளது தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் இருந்து அதிக அளவில் தினசரி மக்கள் வந்து முருகப்பெருமானை தரிசனம் செய்து கொண்டு செல்கின்றனர். தற்போது ஏராளமான கோயில்களில் கிரிவலப் பாதை அமைக்கப்பட்டு வருகின்றனர் அதேபோல் இக்கோவிலுக்கும் கிரிவலப் பாதை அமைக்க வேண்டுமென்று பொதுமக்கள் கேட்டு வருகின்றனர் தற்போது அறங்காவலர் குழு தலைவராக பொறுப்பேற்று இருக்கும் அருணாச்சலம் அவர்கள் இந்து சமய அறநிலைத்துறை சார்பாக சுற்றுலா துறையிலும் கோவிலுக்கு கிரிவலப் பாதை அமைப்பதற்கு கோரிக்கை வைக்கப்பட உள்ளது என்று பொதுமக்களிடம் கூறினார் விரைவில் கிரிவலப் பாதை அனுமதி கிடைத்ததும் பணிகள் தொடங்கும் என்று கூறினார்.

## காரைக்குடியில் பட்டப் பகலில் இளைஞர் வெட்டிக்கொலை தொடர் கொலைகளால் பொதுமக்கள் அதிர்ச்சி!

காரைக்குடி மார்ச்.22

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சேர்வா ஊரணி பகுதியைச் சேர்ந்தவர் மனோஜ் (23) இவர் சரித்திர பதிவேடு குற்றவாளி ஆவார். கடந்த ஆண்டு கஞ்சா சிக்கிய வழக்கில் சிறை சென்று பிணையில் வெளிவந்தார். பிணையில் வந்த அவர் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் ஜாமின் கையெழுத்து போடுவதற்காக நண்பர்களுடன் இருச்சக்கர வாகனத்தில் வந்துள்ளார்.

ஜாமின் கையெழுத்து போட்டுவிட்டு அங்கிருந்து 500மீட்டர் காவல் நிலையத்தைவிட்டு வரும்போது இவரை பின்தொடர்ந்து காரில் வந்த மர்ம கும்பல் இவரை துரத்தியது. பைக்கில் முன்னாள்



சென்றவர்களை காரில் இடித்து அங்கிருந்து தள்ளிவிட்டு அங்கிருந்து 100அடி சாலையில் ஓடிய நபரை மர்ம கும்பல் ஒன்று ரத்த வெள்ளத்தில் அவரை சரமாரியாக வெட்டி காரில் தப்பி சென்றது. இதில் படுகாயம் அடைந்த மனோஜின் நண்பர்கள் இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் உயிரிழந்த மனோஜின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தப்பிச் சென்ற மர்ம கும்பலை காரைக்குடி துணை கண்காணிப்பாளர் பார்த்திபன் தலைமையிலான காவலர்கள் வலை வீசி தேடி வருகின்றனர். பட்டப்பகலில் இளைஞர் ஒருவர் மர்ம கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காரைக்குடியில் இரண்டாவது முறையாக இதுபோல் கொலை சம்பவம் அரங்கேறி உள்ளது மக்கள் நடமாட்டம் அதிகமாகவும் இருக்கும் பகுதியில் கொலை நடப்பது சர்வ சாதாரணமாக மாறி விட்டது. பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். தமிழ்நாட்டில், இனிமேல் கொலை சம்பவங்கள் நடைபெறாது என்று முதல்வர் ஸ்டாலின் கூறிய நிலையில், கொலையாளிகளை சுட்டுப்பிடிக்க காவல்துறை தலைவர் உத்தரவிட்டிருந்தார். ஆனால், அதை மீறி மேலும் ஒரு கொலை சம்பவம் பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் நடைபெற்றுள்ளது, இது தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கின் நிலைமையை தோலுரித்து காட்டியுள்ளது.

## செம்பாக்கத்தில் தமுமுக சார்பாக நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்ச்சி

செம்பாக்கம் மார்ச் 22

செம்பாக்கத்தில் தமுமுக சார்பாக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன் அவர்கள் தலைமையில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி தலைவர் சகோதரர் ப.அப்துல் சமத், தமுமுக பொதுச் செயலாளர் பேராசிரியர் ஜெ.ஹாஜாகனி, மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் ஆகியோர் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

இதில் மாவட்ட உலமாக்கள் அணி செயலாளர் எஸ்.கே. இஸட்.செய்யது முகமது இப்ராஹிம் பைஜி அவர்கள் கிராத் துவங்கி வைத்தார்

மஸ்ஜிதே அன்வர் தலைவர்





ஏ.முகமது யூசுப், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் ஏ.முகமது ஜமீல், மாவட்டத் துணைச் செயலாளர் ஐ.ஜமால், பகுதி தலைவர் எம்.நாசர் அலி, பகுதி செயலாளர் கே.முகமது இம்தியாஸ், செம்பாக்கம் பகுதி செயலாளர் ஏ.நூருல் அமீன், பகுதி பொருளாளர் வி.ஏ.அக்மல் பாஷா, பகுதி துணைத்தலைவர் ஆர்.நாசர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தலைமை கழக பேச்சாளர் ஜே.சலீம் கான், மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாவட்ட பொருளாளர் எம்.சபியுல்லா, என்.மாவட்ட துணைத் தலைவர் ஏ.என்.அப்துல் ரகுமான், மாநில இளைஞரணிச் எஸ்.தமிம் அன்சாரி, மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மாநில தொழிற்சங்க அணி செயலாளர் ஏ.சாதிக் பாஷா, மாநில தொழிற்சங்க அணி பொருளாளர் ஏ.ஆசிக் ஹமீது, மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அணி துணைச்செயலாளர் எஸ்.முகமது நைனார், விளையாட்டு அணி மாநில துணை செயலாளர் யூ.ரஹ்மத்துல்லா, மாவட்டத் துணைச் செயலாளர் ஓகேஎன். அப்துல் காதர், பி.சாகுல் ஹமீது மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், மறுமலர்ச்சி திராவிட கட்சி நிர்வாகிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி நிர்வாகிகள், திராவிட கழக நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், ஜமாத்தார்கள் பொதுமக்கள் என ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டானர்..

## வட மாநில தொழிலாளி படுகொலை ஒடிசா சென்று கொலையாளியை கைது செய்த குன்னூர் போலீசார்

குன்னூர், மார்ச்22

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை மரப்பாலம் பகுதியில் தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணி புரிய ஒடிசா மாநிலத்தில் இருந்து வந்து நரேந்திரன் (42) வீரேந்திரன் ஆகியோர் இருவர் கடந்த ஒரு வாரமாக பணியாற்றி வந்த நிலையில் அவர்களுக்கு தங்குவதற்காக மரப்பாலம் பகுதியில் தோட்ட நிர்வாகம் சார்பாக தங்குவதற்கு வீடு ஒதுக்கப் பட்டிருந்தது இந்நிலையில் பதினெட்டாம் தேதி நரேந்திரன் பணிக்கு வராததால் மேலாளர் வீட்டுக்கு வந்து பார்த்தபோது நரேந்திரன் கழுத்து அறுக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்த மேலாளர் உடனடியாக காவல்துறைக்கு தகவல் கொடுத்தார். இதனை தொடர்ந்து குன்னூர் டிஎஸ்பி ரவி தலைமையில்



இன்ஸ்பெக்டர் சதீஷ் மற்றும் போலீசார் விரைந்து வந்து நரேந்திரனின் உடலையும்,ரத்த கரை படிந்துள்ள அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். மேலும் இது தொடர்பாக மாவட்ட எஸ் பி என் எஸ் நிஷா சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி சென்றார். இந்த கொலை தொடர்பாக மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. இந்த மோப்பநாய் மரப்பாலத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் மலைப்பாதையில் வேகமாக சென்று நின்றுவிட்டது. முன்னதாக எதிரே வரும் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுமோப்ப நாய்க்கு வாகன ஓட்டிகள் வழி விட்டனர். இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து நரேந்திரனின் உடலை பிரேத பரிசோதனைக்காக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் வீரேந்திரனை பிடிக்க குன்னூர் டிஎஸ்பி ரவி மேற்பார்வையில் நான்கு தனிப்படைகள் அமைக் கப்பட்டு கோவை, திருப்பூர், ஈரோடு,சென்னை உள்ளிட்ட பகுதிகளில் விசாரணை மேற்கொண்டு வந்தனர். மேலும் இவனது செல்போன் செயல் பாடுகள் குறித்தும் கண்காணிக் கப் பட்டதில் கோவை ரயில் நிலையத்தில்சுவிட்ச் ஆப் செய்தது தெரிய வந்தது. இது மட்டுமல்லாமல் ஒடிசா மாநிலத்தில் உள்ள வீரேந்திரனின் உறவினர்களிடமும் போலீசார் தொலை பேசி மூலம் விசாரணை மேற்கொண்டனர்.

இதில் போலீஸ் எஸ்ஐ குணா தலைமையில் காவலர்கள் ஜாகிர் உசேன்,வினித் பாலாஜி ஆகியோர் அடங்கிய தனிப்படையினர் கடந்த பதினெட்டாம் தேதி ரயில் மூலம் ஒடிசா சென்றனர். அங்குள்ள போலீசார் உதவியுடன் வீரேந்திரனை நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு குன்னூர் போலீசார் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து குற்றவாளியாக கருதப்படும் வீரேந்திரன் குன்னூர் கொண்டு வரப்பட்டார். தற்போது போலீசார் விசாரணையில் தான் கொலைக்குண்டான காரணம் தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர். இந்த கொலைச் சம்பவம் தொடர்பான கைது செய்யப்பட்ட குற்றவாளியை போலீசார் ஒடிசா சென்று இரண்டு நாளில் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தர்பூசணி வாங்குவோர் கவனத்திற்கு.....



கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் ரசாயன ஊசி செலுத்தப்பட்ட 6 டன் தர்பூசணி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தர்பூசணியின் உள்புறம் சிவப்பாக இருக்க ஊசி செலுத்தப்பட்டு விற்பனைக்கு வைத்திருந்தகாக கூறப்படுகிறது. மேலும், ரசாயன ஊசி செலுத்தப்பட்டதை கண்டறிய, தர்பூசணியை வெட்டிய பிறகு சிவப்பான பகுதியில் வெள்ளை நிற காகிதத்தால் துடைத்து பார்த்தால், அதில் சாயம் ஒட்டியதை காணமுடியும் என கூறப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் விற்கபப்டும் தர்பூசணி செயற்கை முறையில் பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். மேலும் அழுகிய பழங்களை விலை குறைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

# கம்பத்தில் ரேஷன் கார்டுக்கு கைரேகை பதிவு செய்யும் பணி



கம்பம் மார்ச் 22:

கம்பத்தில் ரேஷன் கார்டுக்கு கைரேகை பதிவு செய்யும் பணி நடைபெற்றது. தேனி மாவட்டம் கம்பத்தில் ரேஷன் கார்டுகளில் பி.எச்.எச். ஏ.ஏ.ஒய்., குறியீடு எண் கொண்ட குடும்ப ரேஷன் கார்டுகளில் உள்ள பள்ளி மாணவர் , மாற்றுத்திறனாளிகள் முதியோர்களுக்கு கை ரேகை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 11 ஆவது வார்டு தாத்தப்பன்குளம் பகுதியில் உள்ள வீடுகளில் 5 நம்பர் ரேசன் கடை விற்பனையாளர் மாசனம் கைரேகைகளை பதிவு செய்தார். உடன் அப்பகுதி 11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கம்பம் சாதிக் அலி இருந்தார்.

# திண்டுக்கல்லில் அகில இந்திய காங்கிரஸ் சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



திண்டுக்கல், மார்ச்.22

திண்டுக்கல் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும்போக்குவரத்து ஐ என் டி சி யுயின் தென்மண்டல தலைவர் துரை மணிகண்டன் தலைமையில் திண்டுக்கல் மாநகர் இளைஞர் காங்கிரஸ் தலைவர் முகம்மது அலி,முகம்மது அப்பாஸ் மற்றும் காங்கிரஸ் பிரமுகர் பிச்சை முத்து மற்றும் காங்கிரஸ் மாவட்ட ஒன்றிய பொருப்பாளர்களுடன் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வலையபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்படக் கண்காட்சி ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்




மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.47 சிங்காரத்தோப்பு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆண்டு விழாவில் மேயர் இந்திராணி பொன்வசந்த் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங் கினார்கள் அருகில் துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் முகேஷ் சர்மா , கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , மாமன்ற உறுப்பினர் பானு ஆகியோர் உடன் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் குறித்து ஒப்பந்ததாரர்களிடம் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆய்வு கூட்டம் நடத்தினார் இந்நிகழ்வில் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன் தலைமை பொறியாளர் செல்வநாயகம் மற்றும் மாநகராட்சி அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்




திருப்பூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் குறித்து ஒப்பந்ததாரர்களிடம் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆய்வு கூட்டம் நடத்தினார் இந்நிகழ்வில் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன் தலைமை பொறியாளர் செல்வநாயகம் மற்றும் மாநகராட்சி அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்

## பொறியியல் படிப்பு முடித்தவர்களுக்கு புத்தாக்க பயிற்சி



சிவகங்கை , மார்ச் 22

சிவகங்கை மாவட்டத்தில் பொறியியல் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு புத்தகப் பயிற்சி வழங்கப்படுவதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷாஅஜீத் தகவல் தெரிவித்துள்ளார் . இது குறித்து அவர் வெளியிட்டுள்ள தகவலில் கூறியிருப்பதாவது : ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் இளநிலை பொறியியல் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு புத்தாக்க பயிற்சி வழங்கப்படுகிறது . தாட்கோ நிறுவனம் மூலம் வழங்கப்படும் இந்த பயிற்சியில் கணினி பொறியியல் நிபுணத்துவம் , புதுமைத் திறன்களை வழங்குவது , மின்னணு வடிவமைப்பு உற்பத்தித் துறை , மற்றும் தானியங்கி தொழில்துறை ஆகியவற்றுக்கான புத்தாக்க பயிற்சி வழங்கப்படுகிறது .

இந்த பயிற்சிக்கு கடந்த 2022 -2023 , மற்றும் 2024ஆம் கல்வி ஆண்டுகளில் படிப்பை முடித்து 21 முதல் 25 வயதிற்குள் இருக்க வேண்டும் . குடும்ப ஆண்டு வருமானம் 3 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் . இந்த பயிற்சியானது 18 வாரங்கள் வழங்கப்படும் . விண்ணப்பிக்க விரும்புவோர் www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவுசெய்து பயன்பெறலாம் . இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

# தாம்பரம் மாநகராட்சி, சண்முகம் சாலையில் திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு




தாம்பரம், மார்ச்.22

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் தாம்பரம் மாநகர செயலாளருமான எஸ்.ஆர். ராஜா வழிகாட்டுதலின்படி தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டல குழு தலைவரும், பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் அறிவுறுத்தலின்படி தாம்பரம் மாநகராட்சி, சண்முகம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலில் தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் இரா. செல்வகுமார் அவர்கள் தாய் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.செல்வபிரகாஷ், ஹோட்டல் எஸ்.ராஜா, எஸ்.விஜய் ஏற்பாட்டில் பாட்டி மறைந்த ஆர்.தனம்மாள் 30வது நினைவு நாளை முன்னிட்டு திருகரங்களால், பொது மக்களுக்கு நீர் மோர் மற்றும் தர்பூசணி பழம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் இ.நவீன்குமார், மு.கணபதி, ஜே.டேவிட் லிவிங்ஸ்டன், எஸ்.விஜய், ஆர்.லக்ஷ்மி, ஆர்.ஹரிஹரன் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..



தமிழக விவசாய சங்க தலைவர் பி.ஆர்.பாண்டியன் பஞ்சாபில் கைது செய்யப்பட்ட நிலையில் அதற்கு கண்டனம் தெரிவித்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தபால் அலுவலகம் முன்பு விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் விவசாயிகள் சங்கத்தைச் சார்ந்த ராமர், மணிகண்டன், செல்லம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை தேசிய பசுமைப்படை சார்பாக உலக காடுகள் தினக் கொண்டாட்டம்




காரைக்குடி மார்ச் 22

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தேசிய பசுமைப்படை சார்பாக உலக காடுகள் தினம் கொண்டாடப்பட்டது.

தேசிய பசுமைப்படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ தலைமை வகித்தார். கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராமர் முன்னிலை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் ஜெகநாதன் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி கூறும்போது இந்த 2025 ஆண்டுக்கான கருப்பொருள் காடுகள் மற்றும் உணவு. இது காடுகளுக்கும் உலகளாவிய பாதுகாப்பிற்கும் இடையிலான ஆழமான தொடர்பை வலியுறுத்துகிறது. இந்தியாவில் காடுகள் கலாச்சாரம் பொருளாதாரம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்துக்கு ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. 2012 இல் ஐக்கிய நாடுகள் சபை வன வளத்தைப் பாதுகாக்கவும் அதை பற்றிய விழிப்புணர்வை உலகளவில் உணர்த்தவும் மார்ச் 21 ஆம் தேதியை உலக காடுகள் தினமாக கொண்டாட முடிவெடுத்தது. காடுகள் என்பது அதில் வாழும் தாவரங்கள் விலங்கினங்கள் பறவைகள் பூச்சி இனங்கள் நுண்ணுயிரிகள் ஆகிய அனைத்தையும் கொண்ட ஒரு தொடர் இயக்கத்தின் கூட்டமைப்பாகும்.

எனவே நீங்கள் குடும்பத் தலைவராக இருந்தால் உலக காடுகள் தினத்தில் குடும்பத்துடன் அருகிலுள்ள வனப்பகுதிக்கு சென்று இயற்கையை சுவாசித்து நமக்கு பல்வேறு பயன்களை தரும் காடுகளுக்கு நன்றி செலுத்துவீர். நீங்கள் மாணவராக இருப்பின் உங்கள் பள்ளி அல்லது கல்லூரியில் உள்ள தேசிய பசுமைப்படை சூழல் மன்றம் ஆகியவற்றின் உறுப்பினராக சேர்ந்து ஆசிரியருடன் இணைந்துபள்ளி வளாகத்தில் மரங்கள் நட்டு பாதுகாப்பீர். நீங்கள் தொழில் முனைவராக இருப்பின் உங்கள் தொழிற்சாலை வளாகத்தில் மரங்கள் நட்டு பசுமை சேர்பீர். மரங்கள் நட்டு பசுமை கூட்டுவோம். பழம் பெருமை வாய்ந்த தமிழ் மண்ணுக்கு பசுமை போர்வை உடுத்தி பெருமை சேர்ப்போம். நாமும் நமது சந்ததியினரும் நலம்பெற நாளும் வனம் காப்போம் என்றார்.

ஓவிய ஆசிரியர் செல்வம் நன்றி கூறினார். காடுகளுக்கு களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. தலைமையாசிரியர் ராஜேந்திரன் ஆசிரியர்கள் கணேசன் ஆரோக்கியசாமி புகைப்பட கலைஞர் ஜான் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



காரைக்குடியில் பிரபல ரவுடி மனோ நேற்று காலை ஓட ஓட விரட்டி வெட்டிக் கொலை செய்யப்பட்டார். நிபந்தனை ஜாமீனில் உள்ள ரவுடி மனோ காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் கையெழுத்திட வந்த போது வெட்டிக் கொலை செய்துள்ளனர் கொலையாளிகள் தப்பி ஓட்டம் பிடித்தனர். சம்பவ இடத்தில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். முன்விரோதம் காரணமாக இப்படுகொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறன்றனர் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் (இகாப) உத்தரவு பேரில் காரைக்குடி துணை காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன்(தகாப) மற்றும் தேவகோட்டை துணை காவல் கண்காணிப்பாளர் கௌதம்(தகாப) மேற்பார்வையில் தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..

# திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலித் விடுதலை இயக்கத்தின் சார்பில் கோரிக்கை மனு

திண்டுக்கல், மார்ச்.22



திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலித் விடுதலை இயக்கத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது இதில் சாதிய வெறியாட்டங்களால் படுகொலை செய்யப்படும் பட்டியல் மற்றும் பழங்குடியின மக்களின் வழக்குகள், வன்கொடுமை தடுப்புச்சட்டம் புதிய திருத்தங்கள் 2016ன் படி பதிவுசெய்யப்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாக ரூ 12 லட்சம், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, குடும்ப ஓய்வூதியம், இலவசமாக 2 ஏக்கர் நிலம், இலவச வீட்டுமனை பட்டா, காங்கிரீட் வீடு, குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும் ஆனால் திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 3 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 4 பேர் வன்முறையால் பாதிக்கப்பட்டனர். இவர்களின் குடும்பத்திற்கு இதுவரை எந்த வித நிவாரணமும் வழங்கப்பட வில்லை. எனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் உட்பட அனைத்து வகையான நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இக்கோரிக்கை மனுவின் போது தலித் விடுதலை இயக்கத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தேவகோட்டை அருகே பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கிய தொண்டு நிறுவனம்

சிவகங்கை, மார்ச்.22




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையை அடுத்துள்ளது புலியால் . இந்த ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பெற்றோர் இல்லாத மாணவ , மாணவியர்களுக்கு விடியல் என்னும் தொண்டுநிறுவனத்தின் மூலம் இலவச பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டது பின்பு அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசமாக எழுது பொருட்கள் , மற்றும் மழைக்கோட்டுகள் வழங்கப்பட்டது . இதில் 100 மாணவ , மாணவிகள் பயன்பட்டனர் . விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேவகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி அவர்கள் பேசும்போது...... மாணவிகளுக்கு ஒரு கருத்தை பதிவு செய்ய விரும்புகிறேன் . குட்.. டச் , மற்றும் பேடு ...டச் என்று உள்ளது . மாணவிகளை யாரேனும் பேடு...டச் அதாவது தவறான நோக்கில் தொட்டால் அவர்கள் நண்பர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர்கள் மூலமாகவோ அல்லது பெற்றோர்கள் மூலமாகவோ காவல் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் . அப்போதுதான் பாலியல் குற்றங்கள் குறையும் என்று பேசினார் . இதனைத் தொடர்ந்து விடியல் தொண்டுநிறுவனத்தின் இயக்குனர் ஆர்.எம். ரோணிக்கா பேசும்போது மாணவ , மாணவிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் தற்போது நகர் பகுதிகளில் போதைப் தொடர்பான பொருட்கள் எளிதாக கிடைக்கிறது . எனவே மாணவர்கள் விழிப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும் என்று பேசினார் . நிகழ்வின் தொடக்கத்தில் பள்ளியின் தலைமை ஆசிரியர் வரவேற்றுப் பேசினார். விழாவின் நிறைவில் விடியல் தொண்டுநிறுவனத்தின் தலைவர் பா.லீமாரோஸ் நன்றி கூறினார் .




திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது.உடன் இணை இயக்குநர் மீரா உட்பட பலர் உடனிருந்தனர்




திருப்பூர் ஆர் கே ரெசிடென்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உரிமைகள் திட்டம் குறித்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற மாற்றுத்திறனாளியின் கூட்டமைப்பு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கான விளக்க கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.உடன் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தின் உதவி இயக்குனர் ரவீந்திரன், மாநகர காவல் ஆணையர் ராஜராஜன், உரிமைகள் திட்டம் மேலாளர் ராஜராஜன், சங்கர் சகாதேவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார், செயலாளர் சட்ட உரிமைகள் மையம் சமீனா பேகம், மருத்துவக் கல்லூரி மருத்துவர் அலுவலர் சரவணகுமார் உட்பட பலர் பங்கேற்றனர்..



சிவகங்கை மாவட்டம், தலைமை தேர்தல் அலுவலர் அவர்களின் அறிவுரையின்படி, தேர்தல் செயல்முறைகளை வலுப்படுத்துதல் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரடங்கில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) முத்துக்கழுவன், தேர்தல் வட்டாட்சியர் மேசியாதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு, காலாண்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், தேர்தல் வட்டாட்சியர் அ.மேசியாதாஸ் உட்பட பலர் உள்ளனர்



தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் உலக வன தினத்தை முன்னிட்டு, வனத்துறையின் சார்பாக முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி சொர்ணம் ஜெ.நடராஜன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், ஆகியோர் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.சிவ பிரகாஷ், , துணை இயக்குநர், மேகமலை புலிகள் சரணாலயம் சி.ஆனந்த், , மாவட்ட வன அலுவலர் ஜெ.ர.சமர்த்தா, உதவி வன அலுவலர் அரவிந்த், ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

## தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு சார்பில் சிபிஐஎம் அகில இந்திய மாநாடு நிதியளிப்பு பேரவை



மதுரை மார்ச்.22

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாடு மதுரையில் வருகிற ஏப்ரல் 2 முதல் 6 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டிற்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மதுரை கிளை சார்பில் நிதியளிப்பு பேரவை வியாழனன்று மதுரை தீடீர் நகரில் உள்ள

பி.ராமமூர்த்தி நினைவகம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில துணைப் பொதுச் செயலாளர் வி. பிச்சைராஜன் தலைமை வகித்தார். அமைப்பின் மதுரை கிளை மாவட்டத் தலைவர் ஆர்.மாரிச்சாமி வரவேற்று பேசினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் கே.ராஜேந்திரன், ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினார்கள். பேரவையை நிறைவு செய்து வைத்து அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.எஸ். சுப்ரமணியன் பேசினார். மாவட்டச் செயலாளர் ஆர். சர்தார் பாட்சா நன்றி கூறினார். இந்த நிதியளிப்பு பேரவை கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாட்டிற்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் சார்பில் ரூ.50ஆயிரம் ரூபாயை நிதியாக கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே. சாமுவேல்ராஜ், கே.ராஜேந்திரன் ஆகியோரிடம் வழங்கினார்கள்.



திண்டுக்கல் மாவட்டம். வேடசந்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.இரா.ஐஸ்வர்யா, உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சோழவந்தான் பகுதியில் கிராமப்புற மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் தன்னார்வலருக்கு பாராட்டு

சோழவந்தான் மார்ச் 22



மதுரை சுப்பிரமணியபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஹர்சினி கிஷோர் சிங் இவர் கல்வி மற்றும் தொழில் முனைவோற்கான மேலாண்மை படிப்பை பெங்களூர் ஜெயின் பல்கலைக்கழகத்தில் படித்து முடித்த நிலையில் மதுரையில் பல்வேறு கிராம பகுதிகளில் படிக்கும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் புதிய தொழில்நுட்ப பயிற்சியை இலவசமாக வழங்கி வருகிறார்

அதாவது கல்வி இன்டர்நெட் பாதுகாப்பு தொழில்நுட்ப வளர்ச்சி செயற்கை நுண்ணறிவு மெய்நிகர் உணர்வு தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவற்றை கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கி வருகிறார் இதன் தொடர்ச்சியாக மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே தென்கரை கிராமத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு கல்வி இன்டர்நெட் பாதுகாப்பு தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவற்றை வழங்கினார் ஏற்கனவே அவர் பணியாற்றும் நிறுவனம் கர்நாடகாவில் 10,000ற்கும் மேற்பட்ட மாணவர்களை நேரடியாக பயிற்சி மூலம் பயனடைய செய்துள்ளதாக தெரிவித்தார்

இவரது பயிற்சியை பாராட்டி ரூரல் டெக் ரைஸ் நிறுவனம் டெல்லியில் நடைபெற்ற சி இன்ஸ்பயர் நிறுவனத்திலிருந்து யூத் ஐகான் விருதை கடந்த மார்ச் எட்டாம் தேதி இவருக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது அவரது பயிற்சியின் முக்கிய நோக்கம் மொபைல் நூலகம் மெய் நிகர் நுண்ணறிவு தொழில் முனைப்பு பயிற்சி ரோபோடிக்ஸ் பயிற்சி ஆகியவை குறிப்பிடத்தக்க பயிற்சியாக பார்க்கப்படுகிறது

இவரது இந்த முயற்சிக்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பிலிருந்து பாராட்டுக்கள் குவிந்துவருகிறது

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161